அக்டோபர் 28–நவம்பர் 3

**மனன வசனம்**

**விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே. ரோமர் 3:31.**

**ஆராய்ச்சிக்கு**

**ஆதியாகமம் 15:6; 2சாமுவேல் 11; 2சாமுவேல் 12; ரோமர் 3:20,31; ரோமர் 4:1–17; கலா 3:21–23; 1யோவான் 3:4.**

அக்டோபர் 28 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

**பாடம் 5**

# ஆபிரகாமின் விசுவாசம்



வேதாகமக் கோட்பாட்டில் மிகமுக்கியமானதும், சீர்திருத்தம் துவங்குவதற்கு அடிப்படையானதுமான ‘விசுவாசத்தால்மட்டுமே இரட்சிப்பு’ எனும் உண்மையை ரோமர் 4 அடிக்கடி சுட்டிக்காட்டுகிறது. 500 வருடங்களுக்கு முன்பு இதே வாரத்தில்தான் லூதர் இந்த உண்மையைக் கண்டறிந்தார்.

பரிசுத்தத்திற்கும் நற்குணத்திற்கும் பேர்போன ஆபிரகாம்கூட நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் கிருபையாலே இரட்சிக்கப்படவேண்டியிருந்தது. ஆபிரகாமே தன் கிரியைகளாலும் நியாயப்பிரமாண நடத்தையாலும் தேவனுக்குமுன் நீதிமானாகவில்லை என்றால், நமக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது? ஆபிரகாமும் கிருபையால்தான் நீதிமானாக முடிந்தது; யூதர் மற்றும் புறஜாதியார் என ஒவ்வொருவரும் அப்படிதான்.

இரட்சிப்பின் திட்டத்திலுள்ள மூன்று முக்கிய படிநிலைகளை ரோமர் 4இல் பவுல் கூறுகிறார்:

**1) தேவ ஆசீர்வாதத்தின் வாக்குறுதி (கிருபையின் வாக்குறுதி)**

**2) அந்த வாக்குறுதிக்கு மனிதர்களின் பதில் (விசுவாசிப்பது)**

**3) நம்புவோருக்கு தேவன் நீதி வழங்குதல் (நீதிமானாக்கப்படுவது)**

இப்படித்தான் ஆபிரகாமின் வாழ்வில் நிகழ்ந்தது; நம் வாழ்விலும் நிகழ்கிறது.

நாம் தகுதியற்றவர்கள். கிருபையால் இரட்சிப்பு நமக்கு அருளப்படுகிறது. நாம் தகுதியானவர்களாக இருந்தால், அதைப் பெற உரிமை உள்ளது; உரிமை இருந்தால், அது கடனாக இருக்குமே தவிர ஈவாக இருக்காது. நாம் விழுந்துபோனவர்கள் என்பதால், இரட்சிப்பு ஈவாகத்தான் இருந்தாகவேண்டும்.

விசுவாசத்தால்தான் இரட்சிப்பு என்பதை நிரூபிக்க ‘அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்’ என்று பவுல் சொல்கிறார். ஆதி 15:6. **விசுவாசத்தால்தான் இரட்சிப்பு** என்பது வேதாகமத்தின் முதல் புத்தகத்திலேயே சொல்லப்பட்டுள்ளது.

2017, நவம்பர் 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

***ரோமர் 3:31இல் பவுல் வலியுறுத்துகிற கருத்து என்ன? அட்வென்ட்டிஸ்டுகளுக்கு இது ஏன் ஒரு முக்கியக் கருத்தாக இருக்கிறது?***

விசுவாசமானது நியாயப்பிரமாணத்தைப் பயனற்றுப் போகச்செய்யவில்லை என்று இந்த வசனத்தில் பவுல் கூறுகிறார். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டவர்கள்கூட, அதாவது பழைய ஏற்பாட்டின் மொத்தச் சட்டத்தொகுப்பின்படியும் நடந்தவர்கள்கூட அப்படி நடந்ததால் இரட்சிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டு மார்க்கத்தைப்போல பழைய ஏற்பாட்டு மார்க்கத்திலும் பாவிகள் விசுவாசத்தால்தான் தேவ கிருபையைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது.

***பழைய ஏற்பாட்டிலும்கூட நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தால்தான் இரட்சிப்பு உண்டாயிற்று என்பதை ரோமர் 4:1-8 எவ்வாறு காட்டுகிறது?***

ஆபிரகாம் 'தேவனை விசுவாசித்தார்'; நீதிமானாக எண்ணப்பட்டார். எனவே, விசுவாசத்தால்தான் நீதி கிடைப்பதாக பழைய ஏற்பாடு போதிக்கிறது. அதனால் விசுவாசமானது நியாயப்பிரமாணத்தை 'அவமாக்குகிறது' என்கிற எந்தக் கருத்தும் பொய்யானது. அவமாக்குதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை கடர்ஜியோ; 'பயனற்றுப் போகச்செய்தல்' 'செல்லத்தகாததாக்குதல்' என்று அர்த்தம். விசுவாசத்தால்தான் இரட்சிப்பு என்பதே பழைய ஏற்பாடு முழுவதிலும் சொல்லப்படுகிறது. பழைய ஏற்பாடு முழுவதிலும் கிருபைபற்றியே போதிக்கப்படுகிறது. உதாரணமாக, ஆசரிப்புக்கூடாரச் சடங்குகள்கூட பாவிகள் இரட்சிக்கப்படுகிற வழியைத்தாம் காட்டின; அதாவது மக்கள் தங்களுடைய கிரியைகளால் அல்ல, தங்களுக்குப் பதிலாக மரிக்கக்கூடிய ஒருவரால் இரட்சிக்கப்படுவதாகக் காட்டின.

பத்சேபாளிடம் கேவலமாக நடந்துகொண்ட தாவீதுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது எப்படி? நியாயப்பிரமாண நடத்தையானது அவரை இரட்சிக்கவில்லை; ஏனென்றால், நியாயப்பிரமாணத்தின் பல்வேறு நியதிகளின்படி பல்வேறு விதங்களில் அவர் குற்றவாளியாக இருந்தார். நியாயப்பிரமாணம்தான் தாவீதை இரட்சித்திருக்கமுடியுமென்றால், அவர் இரட்சிக்கப்பட்டிருக்கவே முடியாது.

தாவீதுக்கு தேவன் மீண்டும் தயவு காட்டினதை, விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுவதற்கு ஓர் உதாரணமாக பவுல் சுட்டிக்காட்டுகிறார். தேவனுடைய கிருபையால் மன்னிக்கப்படுகிறோம். விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுவதற்கு பழைய ஏற்பாட்டில் உள்ள மற்றொரு உதாரணம் இது. முற்கால இஸ்ரவேலரில் பலர் கிரியைத்துவக்காரர்களாக மாறினாலும், யூதமார்க்கமானது கிருபையின் மார்க்கம்தான். கிரியைத்துவம் என்பது அதன் மாறுபாடான ஒரு மார்க்கமேதவிர அடிப்படையான மார்க்கம் கிடையாது.

---

தாவீதின் பாவத்தையும் அவர் மன்னிக்கப்பட்டதையும் பற்றித் தியானியுங்கள். 2சாமு 11; 12; சங் 51. வருத்தகரமான அந்தச் சம்பவத்தில் உங்களுக்குள்ள படிப்பினை என்ன? சபையில் விழுந்த நிலையில் உள்ளவர்களை நாம் எவ்வாறு நடத்தவேண்டும் என்பதற்கு இதை ஒரு பாடமாக எடுத்துக்கொள்ளலாமா?

பவுல் சொல்வது வேதாகமக் கருத்து மட்டுமல்ல. இரட்சிப்பின் அடிப்படையான, தேவனோடு நமக்குள்ள உறவின் அடிப்படையான ஒரு விஷயமும்கூட. தேவன் தன்னை ஏற்றுக்கொள்ள தான் வேலைசெய்ய வேண்டும் என்று ஒருவர் நினைத்துவிட்டால், அவர் ஒரு குறிப்பிட்ட பரிசுத்த தன்மையை அடைந்தால்தான் தனக்கு மன்னிப்பு கிடைக்கும் என்று நம்புவார். அதனால் அவர் தன் கிரியைகளைப் பார்க்க ஆரம்பிப்பார். இப்படிப்பட்டவர்களின் நம்பிக்கை எல்லாம் சுயத்தை மையமாகக்கொண்டே இருக்கும்; இது மோசமான ஒரு நிலையாகும்.

மாறாக, நீதிமானாக்கப்படுவது தேவனுடைய ஈவு; தகுதியும் புண்ணியமும் இல்லாத ஒருவருக்கு அருளப்படுவது. இதை ஏற்றுக்கொள்கிறவர், இயல்பாகவே தன்னைப் பார்க்காமல் தேவ அன்பையும் கிருபையையும் நோக்கிப்பார்க்க ஆரம்பித்துவிடுவார்.

***யாரால் தேவனுடைய அன்பையும் குணத்தையும் பிரதிபலிக்க முடியுமென நினைக்கிறீர்கள்? தன்னையே பார்ப்பவராலா, தேவனைப் பார்ப்பவராலா?***

---

***விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்கிற கருத்தை ரோமர் 4:6-8இல் பவுல் எவ்வாறு விவரிக்கிறார்?***

'பாவியானவன் விசுவாசத்தோடு கிறிஸ்துவிடம் வந்து, அவருடைய புண்ணியங்களைப் பற்றிக்கொண்டு, பாவத்தை ஏற்கிறவர்மேல் தன் பாவங்களைச் சுமத்திவிட்டு, அவரிடம் பாவமன்னிப்பைப் பெறவேண்டும். இதற்காகவே கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். விசுவாசித்து, மனந்திருந்துகிற பாவிக்கு இவ்வாறு கிறிஸ்துவின் நீதி வழங்கப்படுகிறது. அவன் தேவ குடும்பத்தில் ஓர் அங்கத்தினன் ஆகிறான்.' - *EGW, 1SM, p 215.*

யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் விசுவாசத்தால் இரட்சிப்பு வழங்கப்படுவதை பவுல் தொடர்ந்து விவரிக்கிறார். ரோமர் 4:9-12. ஆபிரகாம் ஒரு யூதர் கிடையாது; அவர் ஓர் அஞ்ஞான வம்சத்தைச் சேர்ந்தவர். ஆதி 24:2. புறஜாதியார்-யூதர் என்கிற பாகுபாடு அவருடைய காலத்தில் கிடையாது. ஆபிரகம் நீதிமானாக எண்ணப்பட்டபோது, அவர் விருத்தசேதனம்கூட செய்திருக்கவில்லை. ஆதி 15:6. இப்படியாக ஆபிரகாம், விருத்தசேதனம் பண்ணினவர்களுக்கும் விருத்தசேதனம் பண்ணாதவர்களுக்கும் தகப்பனானார்; இரட்சிப்பு எல்லா மனிதருக்கும் உரியது என்று பவுல் தன் கருத்தை வலியுறுத்துவதற்கு நல்லதொரு உதாரணமாகவும் திகழ்ந்தார். கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்திருக்கிறார்; இதில் இன, தேச பாகுபாடே கிடையாது. எபி 2:9.

கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தது, ஒவ்வொரு மனிதனும் முக்கியமானவன் என்பதைக் காட்டுகிறது; அப்படியானால் இன, தேச, நிற பாகுபாடு ஏன் மோசமான ஒன்றாகும்? இப்படிப்பட்ட பாகுபாடு நம்மிடம் காணப்படுகிறதா என்பதை எவ்வாறு அறியலாம்? தேவ கிருபையால் எவ்வாறு இதை நம் உள்ளங்களிலிருந்து அகற்றலாம்?

500 வருடங்களுக்கு முன்பு இதே நாளில்தான் மார்ட்டின் லூதர் தன் தொன் னூற்றைந்து கோட்பாடுகளை விட்டன்பர்க் ஆலயக்கதவில் தொங்கவிட்டார். **விசுவாசத்தால் இரட்சிப்பு** என்கிற அதே சத்தியம்தான் இன்றைய நம் ஆராய்ச்சியும்.

ரோமர் 4:13இல் 'வாக்குத்தத்தமும்' 'நியாயப்பிரமாணமும்' வித்தியாசப் படுத்திக் காட்டப்படுகின்றன. விசுவாசத்தால் நீதி கிடைப்பதை பழையஏற்பாட்டுப் பின்னணியை வைத்து, கற்றுக்கொடுக்க பவுல் விரும்புகிறார். யூதர்கள் அனை வரும் தங்கள் முற்பிதாவாக ஏற்றுக்கொண்ட ஆபிரகாமை உதாரணமாகக் காட்டு கிறார். ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் நியாயப் பிரமாணத்தினால் அல்ல. ஆபிரகாம் 'உலகத்தைச் சுதந்தரிப்பான்' என்று தேவன் ஒரு வாக்குத்தத்தம் செய்தார். அந்த வாக்குறுதியின்படி, தான் உலகத்தின் சுதந் தரவாளி என்று ஆபிரகாம் விசுவாசித்தார். அதனால் தேவன் அவரை ஏற்றுக் கொண்டு, உலகத்தை இரட்சிக்கும்படி அவர்மூலமாகச் செயல்பட்டார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் கிருபை செயல்பட்டு வந்ததற்கு இது ஒரு மகத்தான உதா ரணமாகும்; அதனால்தான் பவுல் இதை எடுத்துக்காட்டுகிறார்.

***விசுவாசத்தினால் இரட்சிப்பு என்கிற உண்மைதான் பழைய ஏற்பாட்டிலும் மையமாக இருந்தது என்பதை ரோமர் 4:14-17இல் பவுல் எவ்வாறு உறுதிப்படுத்துகிறார்? கலா 3:7-9.***

பவுல் யாருக்கு எழுதுகிறாரென்பதை மறக்கவே கூடாது. யூத விசுவாசிகள் பழைய ஏற்பாட்டு பிரமாணங்களில் மூழ்கியிருந்தார்கள்; நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதை வைத்தே தாங்கள் இரட்சிக்கப்படுவதாக அநேகர் நினைத்தார் கள்; ஆனால் பழைய ஏற்பாடு அப்படிப் போதிக்கவே இல்லை.

அவர்களுடைய தப்பெண்ணத்தைப் போக்க பவுல் முயல்கிறார்; அதாவது, சீனாயில் பிரமாணங்கள் கொடுக்கப்படும்முன்னரே ஆபிரகாம் வாக்குத்தத்தங் களைப் பெற்றுக்கொண்டார்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் அல்ல, விசு வாசத்தாலேயே பெற்றுக்கொண்டார். ட்டோரா மற்றும் சடங்காச்சார முறைகள் அப்போது கொடுக்கப்பட்டிராததால், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு எதையும் சாதிப்பதற்கு வழியே இல்லாமல் இருந்தது.

சீனாய்க்கு முன்பே இருந்துவந்த ஒழுக்கப்பிரமாணத்தைத்தான் பவுல் குறிப் பிட்டார் என்று எடுத்துக்கொண்டாலும், இந்த உண்மை கொஞ்சமும் மாறிவிடாது. நியாயப்பிரமாணத்தால் தேவ வாக்குத்தத்தங்களைப் பெற முயல்வது விசுவாசத் தைப் பயனற்றதாக்குகிறது. விசுவாசம் இரட்சிக்கிறது; நியாயப்பிரமாணம் குற் றப்படுத்துகிறது. குற்றப்படுத்துகிற ஒன்றின்மூலம் இரட்சிப்பைப் பெறமுயல்வது முற்றிலும் வீணானது. யூதர், புறஜாதியார் என நாம் அனைவருமே நியாயப்பிரமா ணத்தை மீறினோம்; எனவே விசுவாசத்தால் நமக்கு அருளப்படுகிற இயேசுவின் இரட்சிக்கிற நீதி தேவைப்படுகிறது; ஆபிரகாமுக்கும் அதுதான் தேவையாக இருந் தது; இந்தச் சத்தியம்தான் புரொட்டஸ்டன்ட் சீர்திருத்தத்திற்கு வழிநடத்தியது.

நியாயப்பிரமாணத்தினால் அல்ல, கிருபையின் வாக்குத்தத்தத்தால் இரட்சிப்பு கிடைக்கிறது. ஆபிரகாமை தேவன் நடத்திய விதங்களைவைத்து இதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். எனவே, தங்கள் கிரியைகளால் இரட்சிக்கப்படலாம் என்கிற நம்பிக்கையை யூதர்கள் உதறவேண்டியிருந்தது; மேசியாவின் வருகையில் நிறைவேறிய ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. யூதரானாலும் புறஜாதியாரானாலும், தங்களுடைய 'நல்ல' கிரியைகளால் தேவனுக்குமுன் நீதிமான்களாகலாமென நினைக்கிற ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும்.

'மனிதன் தன்னுடைய கிரியைகளால் தன்னை இரட்சிக்கலாம் என்பதே ஒவ்வொரு அஞ்ஞான மார்க்கத்தின் அடிப்படை நியதியாக இருக்கிறது. இந்த நம்பிக்கை காணப்படுகிற இடங்களில் எல்லாம் பாவம் தடையின்றி நடைபோடுகிறது.' - *EGW, p 35,36.*

***மேலே எலன் ஒய்ட் சொல்வதின் அர்த்தம் என்ன? நம் கிரியைகளால் நம்மை நாம் இரட்சிக்கலாம் என்று நினைப்பது எவ்வாறு நம்மை பாவத்திற்கு ஆளாக்குகிறது?***

---

***நியாயப்பிரமாணத்திற்கும் விசுவாசத்திற்கும் இடையேயுள்ள உறவை கலாத்தியரில் பவுல் எவ்வாறு விவரிக்கிறார்? கலா 3:21-23.***

---

ஜீவனைக் கொடுக்கிற ஒரு பிரமாணம் இருந்திருக்குமானால், அது தேவனுடைய பிரமாணமாகத்தான் இருந்திருக்கமுடியும். ஆனால், தேவபிரமாணமாகவே இருந்தாலும்கூட, எந்தப் பிரமாணத்தாலும் ஜீவனைக் கொடுக்கமுடியாது என்று பவுல் கூறுகிறார்; ஏனென்றால், எல்லாருமே நியாயப்பிரமாணத்தை மீறி, அதால் குற்றவாளிகளாக்கப்பட்டோம்.

ஆனால், விசுவாசிக்கிறவன் பிழைப்பான் என்று கிறிஸ்துவில் பூரணமாக வெளிப்பட்ட வாக்குறுதியானது, 'நியாயப்பிரமாணத்தின் கீழிருந்து' விடுபட விரும்புகிற அனைவரையும் விடுவிக்கிறது; அதாவது, நியாயப்பிரமாணத்தின் மூலம் இரட்சிக்கப்பட முயன்று, அதால் குற்றத்திற்கும் பாரத்திற்கும் ஆளாவதிலிருந்து விடுவிக்கிறது. விசுவாசமும் கிருபையும் இல்லாதபோது, நியாயப்பிரமாணம் பாரமாகிறது. ஏனென்றால், கிருபையும் விசுவாசமும் விசுவாசத்தால் வருகிற நீதியும் இல்லாமல் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தால், நாம் பாவத்தின் ஆக்கினையையும் பாரத்தையும் சுமக்கிறவர்களாக இருப்போம்.

தேவனோடு உங்களுக்குள்ள அனுபவமானது எவ்வளவு தூரத்திற்கு விசுவாசத்தால் நீதிமானாவதை மையமாக வைத்து அமைந்துள்ளது? அதாவது, மிகமுக்கியமான இந்தச் சத்தியத்தைக் காணாதபடி சத்தியத்தின் பிற அம்சங்கள் மறைக்காமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்? இது இல்லாமல் மற்ற போதனைகளால் ஏதாவது நன்மை இருக்கிறதா?

## நியாயப்பிரமாணமும் பாவமும்

புதிய உடன்படிக்கையில் நியாயப்பிரமாணம் ஒழிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள்; அதை நிரூபிப்பதற்கு சில வசனங்களையும் காட்டுகிறார்கள். இது பகுத்தறிவு இல்லாத, வேதாகம ஆதாரம் இல்லாத கூற்று.

***நியாயப்பிரமாணத்திற்கும் பாவத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகுறித்து 1யோவான் 2:3-6; 3:4 ஆகிய வசனங்கள் என்ன கூறுகின்றன?***

சில நூறு வருடங்களுக்குமுன், அயர்லாந்து எழுத்தாளரான ஜோனதான் ஸ்விப்ட் பின்வருமாறு எழுதினார்: ‘குடி, ஏமாற்று, பொய், களவு போன்ற வார்த்தைகள் ஆங்கில மொழியிலிருந்தும், அகராதிகளிலிருந்தும் நீக்கப்பட்டதாக பாராளுமன்றம் ஒரு சட்டத்தைப் பிறப்பித்தால், மறுநாள் காலையில் எழும்போது நாம் எல்லாருமே இச்சையடக்கமும் நேர்மையும் நியாயமும் உள்ளவர்களாகவும், சத்தியத்தை விரும்புகிறவர்களாகவும் மாறிவிடலாமென யாராவது சொல்லமுடியுமா? இப்படி நிகழ்வது சாத்தியமா?’’ - *A Modest Proposal and Other Satires, p 205.*

அதுபோல, தேவனுடைய நியாயப்பிரமாணம் ஒழிந்திருந்தால், பொய்யும் கொலையும் களவும் இன்னும் ஏன் பாவமாகக் கருதப்படுகின்றன? தேவனுடைய நியாயப்பிரமாணம் மாறியிருந்தால், எது பாவம் என்பதும் மாறியிருக்கவேண்டும். அல்லது, நியாயப்பிரமாணம் ஒழிந்திருந்தால், பாவமும் ஒழிந்திருக்கவேண்டும்; இதை யாராவது ஒத்துக்கொள்வார்களா? 1யோவான் 1:7-10; யாக் 1:14,15.

புதிய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணம் பற்றியும், சுவிசேஷம் பற்றியும் சொல்லப்படுகிறது. பாவம் என்னவென்று, நியாயப்பிரமாணம் காட்டுகிறது; இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலுமே பாவத்திற்கான தீர்வு என்று சுவிசேஷம் கூறுகிறது. நியாயப்பிரமாணம் இல்லாமல் பாவம் இல்லை; பின்னர் நாம் எதிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்? நியாயப்பிரமாணம் இருந்தால் மட்டுமே சுவிசேஷம் அர்த்தமுள்ளதாக இருக்கமுடியும்.

சிலுவை நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். இது நகைப்பிற்குரியது; ஏனென்றால், நியாயப்பிரமாணத்தை மாற்றவோ இரத்து செய்யவோ முடியாது என்பதையே சிலுவை காட்டுகிறது. கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் முன்னரே தேவன் நியாயப்பிரமாணத்தை இரத்துசெய்யாமல் அல்லது மாற்றாமல் இருந்திருந்தாரானால், அதன்பிறகு ஒழித்திருப்பாரா? மனிதர்கள் பாவம் செய்ததுமே நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டு, அதை மீறினதின் தண்டனையிலிருந்து அவர்களைவிடுவித்திருக்கலாமே? இயேசுவும் மரித்திருக்கவேண்டாம். நியாயப்பிரமாணம் ஒழியவில்லை என்பதற்கு இயேசுவின் மரணமே அத்தாட்சி; நியாயப்பிரமாணத்தை மாற்றமுடியாது என்பதாலேயே அவர் மரித்தார். நியாயப்பிரமாணத்தை மாற்ற வழியிருந்தால், விழுகையிலுருந்து நம்மைக் காப்பாற்ற இயேசு மரிக்காமல், நியாயப்பிரமாணத்தை மாற்றியிருக்கலாமே?

விபசாரம்செய்கிறவர்கள் மனவேதனை அடைகிறார்கள்; விபசாரத்திற்கு எதிராக தேவ கட்டளை எதுவும் இல்லாதிருந்தால் கொஞ்சமாவது அந்த வேதனை உண்டாகுமா? தேவனுடைய கட்டளை இன்றும் ஒழியவில்லை என்று புரிந்துகொள்ள, இந்தப் பதில் எவ்வாறு உதவுகிறது? தேவகட்டளைகளை மீறி அதன் விளைவுகளை அனுபவத்திருக்கிறீர்களா?

## மேலும் படிக்க:

“கிரியைசெய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். ரோமர் 4:4. கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தால்தான் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, மேற்கோள் காட்டப்பட்ட வசனத்தை (ஆதி 15:4–6) அப்போஸ்தலர் இங்கு விவரிக்கிறார். ‘அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்’ என்கிற வார்த்தைகளின் அர்த்தத்தை முதலில் கூறுகிறார். (பாவிகளை) அவர்களுடைய கிரியைகளினால் அல்ல, கிருபையால்தான் தேவன் ஏற்றுக்கொள்கிறார் என்பதை இந்த வார்த்தைகள் தெரிவிக்கின்றன.” – *Martin Luther, Commentary on Romans, p. 82.*

“புண்ணியத்தையும் நீதியையும் பெற்றுத்தருகிற கிரியைகளாக மனிதன் தன் கிரியைகளை எண்ணும்படி சாத்தான் அவனை வழிநடத்திவிட்டால், தன்னுடைய பாவச்சோதனைகளால் அவனை மேற்கொள்ளலாம் என்றும், அவனை தனக்கு இரையாக்கிவிடலாம் என்றும் சாத்தான் அறிவான். கல்வாரி ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை உங்கள் வீட்டின் நிலைகளில் தெளியுங்கள், அப்போது பாதுகாப்பாக இருப்பீர்கள்.” – *EGW, ARSH, Sept 3, 1889.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல், விசுவாசத்தால்மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியமானது? இதை அறிந்திருப்பது என்ன வகையான தவறுகளை நாம் செய்யாதபடி தடுக்கும்? இந்த முக்கிய வேதாகம உண்மையைப் புறக்கணிக்கிறவர்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகள் காத்திருக்கின்றன?

2. நியாயப்பிரமாணமும் அதற்குக் கீழ்ப்படிவதும் நம்மை இரட்சிப்பதில்லை என்பது உண்மைதான்; ஆனாலும் நியாயப்பிரமாணம் இன்றும் ஒழிந்து போகவில்லை என்பதற்கு வேறு என்ன காரணங்களைச் சொல்லமுடியும்?

3. நாம் இரட்சிக்கப்படுகிறவிதம் குறித்த கேள்வியே சீர்திருத்தம் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. நாம் இரட்சிக்கப்படும்விதம் குறித்து புரொட்டஸ்டன்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையே காணப்படும் கருத்துவேறுபாடு பற்றி, யாரையும் தனிப்பட்ட விதத்தில் தாக்காமல் எவ்வாறு வெளிப்படையாகவும் நேரடியாகவும் பேசலாம்?

4. நாம் நீதிமான்களாக்கப்பட்ட பாவிகள்; தேவனுக்கு எதிராகப் பாவம் செய்தோம்; தகுதியில்லாத நமக்கு அவர் சலுகையும் கிருபையையும் அருளியிருக்கிறார். பிறரை நாம் அணுகுகிறவிதத்தில் இந்த உண்மை எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கவேண்டும்? நமக்குத் தீங்குசெய்து, நம் இரக்கத்தையும் தயவையும் பெறத் தகுதியில்லாதவர்களை எவ்வளவு இரக்கத்தோடும் தயவோடும் நாம் அணுகுகிறோம்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Hope TV India

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*